# 6.2 விதைத் திருவிழா

அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

Question 1.
அனுமதி – இச்சொல் குறிக்கும் பொருள் ..adscanadian.........
அ) கட்டளை
ஆ) இசைவு
இ) வழிவிடு
ஈ) உரிமை
Answer:
ஆ) இசைவு

Question 2.
விளம்பரத்தாள்கள் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........................
அ) விளம்பர + தாள்கள்
ஆ) விளம்பரத்து + தாள்கள்
இ) விளம்பரம் + தாள்கள்
ஈ) விளம்பு + தாள்கள்
Answer:
இ) விளம்பரம் + தாள்கள்

Question 3.
ஆலோசித்தல் – இச்சொல்லுக்குரிய பொருள் ..........................
அ) பேசுதல்
ஆ) படித்தல்
இ) எழுதுதல்

ஈ) சிந்தித்தல்
Answer:
ஈ) சிந்தித்தல்

Question 4.
தோட்டம் + கலை – இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ......................
அ) தோட்டம்கலை
ஆ) தோட்டக்கலை
இ) தோட்டங்கலை
ஈ) தோட்டகலை
Answer:
ஆ) தோட்டக்கலை

Question 5.
பழங்காலம் இச்சொல்லுக்குரிய எதிர்ச்சொல் ........................
அ) பழைய காலம்
ஆ) பிற்காலம்
இ) புதிய காலம்
ஈ) இடைக்காலம்
Answer:
இ) புதிய காலம்

ஆ. கீழ்க்காணும் சொற்களைச் சேர்த்து எழுதுக.
அ) வழிபாடு + கூட்டம் = .........................
ஆ) வீடு + தோட்டம் = .........................
Answer:
அ) வழிபாடு + கூட்டம் – வழிபாட்டுக்கூட்டம்
ஆ) வீடு + தோட்டம் – வீட்டுத்தோட்டம்

இ. கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.
அ) அழைப்பிதழ்- ............ + ................
ஆ) விதைத்திருவிழா- ............ + ................

Answer:
அ) அழைப்பிதழ் – அழைப்பு + இதழ்
ஆ) விதைத்திருவிழா – விதை + திருவிழா

ஈ. கோடிட்ட இடத்தை நிரப்புக.

Question 1.
விதைத்திருவிழாவில் அமைக்கப்பட்டிருந்த அரங்குகளின் எண்ணிக்கை...........
Answer:
27

Question 2.
விதைகள் .............. ஆனவையாக இருத்தல் வேண்டும்.
Answer:
தரம்

Question 3.
கொண்டைக்கடலை என்பது ................... ஒன்று.
Answer:
நவதானியங்களுள்

**உ. வினாக்களுக்கு விடையளிக்க.**

1. மாணவர்களை எங்கே அழைத்துச் செல்வதாகத் தலைமையாசிரியர் கூறினார்?
Answer:
மாணவர்களை அருகிலுள்ள மேல்நிலைப் பள்ளியில் நடைபெறும் விதைத் திருவிழாவிற்கு அடுத்த வாரம் அழைத்துச் செல்வதாக தலைமையாசிரியர் கூறினார்.

2. ஆசிரியர் வழங்கிய துண்டு விளம்பரத்தாளில் என்ன செய்தி இருந்தது?

Answer:

ஆசிரியர் வழங்கிய துண்டு விளம்பரத்தாளில் இருந்த செய்தி விதைத்திருவிழா தொடர்பான செய்தி' ஆகும்.

3. 'பாதிப்பு' என்று எழுதப்பட்ட அரங்கத்தில் என்ன செய்தி சொல்லப்பட்டது?

Answer:

இரசாயன விதைகள், இரசாயனப் பூச்சி மருந்துகள் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகளைத்தாம் 'பாதிப்பு' என்று சொல்கிறார்கள். இதனால், மண்ணின் தன்மை கெடுகிறது. இதனைக் தடுக்கும் வகையில் இயற்கை முறையில் வேளாண்மை செய்ய வேண்டும் என்பதே அதன் பொருள்.

4. நவதானியங்களுள் ஐந்தின் பெயரை எழுதுக.

Answer:

- கொண்டைக்கடலை
- தட்டைப்பயறு
- மொச்சை
- பாசிப்பயறு
- கோதுமை.

ஊ. சிந்தனை வினாக்கள்.

1. செயற்கை உரங்கள், மண்ணின் வளத்தைக் கெடுக்கும் எனில், அதற்கு மாற்றாக நாம் என்ன செய்யலாம்?

செயற்கை உரங்கள், மண்ணின் வளத்தைக் கெடுக்கும் எனில், அதற்கு மாற்றாக நாம் செய்ய வேண்டுவன:

1. இயற்கை வேளாண்மையைக் கடைப்பிடிக்க வேண்டும்.
2. மண்புழு வளர்த்தல்.
3. கால்நடைகள் வளர்த்து அவற்றின் சாணங்களை எருவாக்குதல்.
4. அவுரிச் செடிகளை வளர்த்து வயலுக்கு எருவாக்குதல்.

DO NOT COPY